[1980 ஜூலை 15

இளம்பவயல் கிராம விவசாயிகள்.

*குறுகிய கால வினா எண். 15 திரு. செ. சிவசாமி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார் கோவில் தாலுகா, இளம்பவயல் கிராமத்தில் உழுவடை செய்யும் விவசாயிகளை சரியானபடி பதிவு செய்யாததால் நிலச்சுவான்தார் உழுது கொண்டிருக்கும் விவசாயிகளை வெளியேற்றிக் கொண்டிருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதனை தடுத்து நிறுத்த என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :— (அ) மற்றும் (ஆ) உழுவடை செய்யும் விவசாயிகள்வசம் நிலம் இல்லையாதலால் நிலச்சுவான்தார் அவர்களை வெளியேற்றும் கேள்வி எழவில்லை.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார் கோவில் தாலுகா, இளம்பவயல் கிராமத்தில் உழுவடை செய்யும் விவசாயிகள் பதிவு செய்யப்படாததன் காரணமாக வெளியேற்றப்படக் கூடிய நிலைமையில் இருக்கிறார்கள். இந்த நிலைமை நீடித்துக் கொண்டிருக்கிறது. உழுவடை செய்யும் விவசாயிகளுக்குப் பாதுகாப்புச் சட்டம் இருந்தும் அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுப்பதற்குப் பதிலாக போலீஸ் கூட நிலச்சுவான்தார்களுக்கு பாதுகாப்புக் கொடுக்கிறது. இந்த நிலைமையை நீடிக்கவிடாமல் அரசு தடுத்து நிறுத்துமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : நிலம் இப்போது அவர்கள்வசம் இல்லையென்றுதான் அங்கே இருக்கிற வட்டாட்சித் தலைவர் தீர்ப்பு இருக்கிறது. யாரிடத்தில் நிலம் இருக்கிறதோ அவர்களுக்குத்தான் பாதுகாப்புக் கொடுப்பார்கள். நிலம் அவர்களிடத்தில் இருப்பதற்கான அத்தாட்சி இல்லை என்ற விவரம் இருக்கிறது.

திரு. செ. சிவசாமி : அங்கிருந்து விவரமான தந்தி எனக்கு வந்திருக்கிறது. அந்த அடிப்படையில்தான் தகவல் சொல்லிக் கொண்டிருக்கிறேன். இதைப் போல் தஞ்சையில் வலிவலத்தார், பூண்டி வாண்டையார், கபிஸ்தலத்தார், நெடும்பலத்தார் போன்றவர்கள் விவசாயிகளை வெளியே அனுப்புவதைத் தடுத்து நிறுத்த முடியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, இப்போது இருக்கிற சட்டப்படி குத்தகைப் பத்திரம் கையிலே இருக்கவேண்டும். ஆனால் பெரிய மிராசுதார்கள் குத்தகைப் பத்திரத்தை கொடுக்காமலே இருக்கக்கூடும். அப்படி குத்தகை பத்திரம் கொடுக்காமல் இருந்தால் நான்தான் குத்தகை செய்கிறேன் என்ற மனுவை குத்தகை செய்கிறவர் கொடுத்து விட்டால் ஸ்தலத்திற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள், அதாவது தாசில்தார் சென்று விசாரிப்பார்கள். பக்கத்து நிலக்காரர்கள் அவர் தான் குத்தகை செய்கிறார் என்று சொன்னால் அவர் அதற்குப் பிறகு அப்படித் தீர்ப்பளிப்பார். விசாரணையில் இன்னார் தான் என்று சொன்னால் வேறு வழியில்லாமல் இப்போது இருக்கிற நிலைமைதான் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, நிலத்தை யார் சாகுபடி செய்கிறார்கள் என்று கிராம அதிகாரிகள் மெயின்டயின் செய்கிற கணக்கிலே அடங்கலிலே எழுதுகிறபோது அதிலே உள்ள 6—வது காலத்திலே சாகுபடியாளர் பெயர் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் பட்டாதாரர்களுடைய பெயரைப் பதிவு செய்கிறார்கள். யார் உண்மையிலேயே சாகுபடி செய்கிறார்களோ அவர்களுடைய பெயரையே 6-வது காலத்திலே பதிவுசெய்வதற்கு ஏற்பாடுகளைச் செய்வார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, குத்தகைதாரர் என்று யாரை தாசில்தார், கணக்குப் பிள்ளை, அல்லது மணியக்காரர் பதிவுசெய்தாலும், விசாரணைக்கு செல்கிறபோது யார் உண்மையிலேயே விவசாயம் செய்கிறார்கள் என்பதை பக்கத்து நிலத்துக்காரர்கள் சொல்கிறார்களோ அவர்களுக்குக் கொடுக்க சட்டத்திலே இடம் இருக்கிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவர் அவர்களே, குத்தகைதாரர்கள் பதிவுக் காலத்தை நீட்டிக்க அரசு முன்வருமா ? அடகோலை இல்லை அல்லது ரசீது இல்லை என்ற காரணத்தினால் பதிவு செய்ய மறுக்கிறார்கள் என்பதால் அதைக் கேட்பதற்குப் பதிலாக பக்கத்திலே உள்ள நிலத்துக்காரர்கள் சொன்னால் அதை வைத்துக் கொண்டு பதிவு செய்வதற்கு ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, முன்பே நான் பதில் சொல்லியிருக்கிறேன். யார் பதிவு செய்யவேண்டும் என்று கேட்கிறார்களோ அவருக்குக் கொடுக்கவேண்டுமென்ற முறையிலே விசாரணையின்போது அவர் தான் குத்தகை செய்கிறார் என்று பக்கத்து நிலத்துக்காரர்கள் 4,5 பேர்கள் சொன்னால் அதை வைத்துக் கொண்டு அவர் பெயரைப் பதிவு செய்யலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார் கோவில் தாலுகா இளம்பவயல் கிராமத்தில் நடந்த சம்பவம் பற்றி நான் பெட்டிஷன் அமைச்சர் அவர்களிடம் நேரிலேயே கொடுத்து இருக்கிறேன். அந்த நிலச்சுவான்தார் வலுவுள்ள, செல்வாக்கு உள்ளவர் என்ற காரணத்தினால் பல ஆண்டுக்காலமாக சாகுபடி செய்யக்கூடிய அந்த விவசாயிகளை பதிவு செய்யாமல் தடுத்து தன் பெயரிலேயே வைத்துக் கொண்டார்கள், ஆகவே அமைச்சர் அவர்கள் இதிலே தனி கவனம் செலுத்தி பல ஆண்டுக்காலமாக அங்கே பயிர் செய்கிற விவசாயிகளை வெளியேற்றாமல் பாதுகாப்புக் கொடுக்கவும், அவர்களுடைய பெயர்களைப் பதிவு செய்யவும் ஏற்பாடு செய்வார்களா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பதிவேட்டிலே பதிகிற பிரச்சினை எழவில்லை. பதிந்தாலும் பதியாவிட்டாலும் அவர் தான் குத்தகை பயிர் செய்கிறார் என்று மற்றவர்கள் சொன்னாலே போதும்; ஆனால் இதிலே அங்கே உள்ளவர்கள் அவர்களுக்குச் சாதகமாக சொல்லவில்லை என்று தெரிகிறது, ஆகவே இப்படிப்பட்ட சிக்கல் ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. பாலசுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே குத்தகை நிலத்திலிருந்து வெளியேற்றுவது சம்பந்தமாக புதுக்கோட்டை மாவட்டத்திலே நடக்கிற விஷயங்கள் பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். பொதுவாகவே குத்தகை நிலங்களிலிருந்து இலகுவாக வெளியேற்றுவதற்கு வேறு சாதனம் ஒன்றை கைப்பிடிக்கிறார்கள், நிலச்சுவான்தார்கள் அந்தச் சாதனம் என்னவென்றால் இரண்டு போகம் விளைகிற நிலங்களில், தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளபோது ஒரு போகம் மட்டும் சாகுபடி செய்கிற நேரத்திலே குத்தகை விவசாயிகள் 2 போகம் போடாமல் ஒரு போகம் போட்டு, ''இஞ்சூரியஸ்'' டு '' லேன்ட் என்ற முறையிலே செய்துவிட்டார்கள் என்றுசொல்லி வெளியேற்றி விடுகிறார்கள் அப்படிப்பட்ட நிலைமைகளைத் தடுக்கஅரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அப்படிப்பட்ட வழக்குகள் வந்தால் அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, இந்த குத்தகை சாகுபடிபற்றி பதிவு செய்வது என்பது பெரிய பிரச்சினையாக இருக்கிறது. தாலுக்கா மட்டத்திலே சர்வ கட்சி கமிட்டி அமைத்து அது நேரடியாக விசாரணை செய்து பதிவுசெய்கின்ற முறையிலே ஏற்பாடு செய்வதற்கு அரசு முன்வருமா? அதிகாரிகளை மட்டுமே நம்பினால் இந்த அரசுக்கே ஆபத்து என்பதை அரசு உணருகிறதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

1980 ஜூலை 15]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: அதிகாரிகளையே நம்பி இல்லாமல் மக்களை நம்பி வோட்டு வாங்கித்தான் நாங்கள் இங்கே வந்து இருக்கிறோம். அதிகாரிகள் வோட்டுப் போட்டார்களா என்று எண்ணிப் பார்க்காமல் இந்த அரசு குத்தகை விவசாயிகள் நன்மை அடைய என்ன என்ன செய்யவேண்டுமோ அதை எல்லாம் செய்துகொண்டு இருக்கிறது. அதிகாரிகளை நம்பாமல் அங்கே இருக்கிற சுற்றுப்புறத்திலே உள்ளவர்களை விசாரித்துத்தான் செய்து கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி இருந்தும் பலயிடங்களில்

(முற்பகல் 9-50)

தவறுகள் வந்து கொண்டிருப்பதாகத் தெரிகிறது. எப்படியாவது குத்தகைதாரர்களை வெளியே அனுப்பாமல் — நிலச்சொந்தக்காரர்கள் எடுக்கும் முயற்சிகளைத் தடுப்பதற்கு இந்த அரசு எல்லாவிதமான முயற்சிகளையும் எடுக்கும் என்பதைத் தெரிவித்து கொள்கிறேன். மாமன்றத்திலுள்ள சட்டமன்ற உறுப்பினர்களும், பொது வாழ்வில் ஈடுபட்டவர்களும் அரசுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: தலைவரவர்களே, கமிட்டி அமைக்கப்படுமா இல்லையா என்பதற்கான விளக்கம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதைப்பற்றி அடுத்தமுறை கேட்கும் கேள்வியில் கேட்கலாம்.

திரு. எம். எஸ். மாணிக்கம்: பேரவைத் தலைவரவர்களே, கலெக்டரால் ஆகாதது கணக்குப் பிள்ளையால் ஆகும் என்று சொல்வார்கள். அதற்குத் தகுந்தது மாதிரி கணக்குப்பிள்ளை குத்தகை பதிவு செய்யும்பொழுது ஒரு நேரத்தில் இவர்தான் சாகுபடி செய்கிறார் என்று சொல்லிவிட்டு' மற்றொரு நேரத்தில் இன்னொருவர் பெயரைச் சொல்கிறார். இப்படிப்பட்ட நிலைமைகளை மாற்ற, தவறு செய்யும் கணக்குப் பிள்ளைகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ் டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, கலெக்டரால் ஆகாதது பியூனால் ஆகும் என்பது, கலெக்டர் சில காரியத்தைச் செய்ய மாட்டார், எடுபிடி வேலைகளைக் கீழே உள்ளவர்கள் செய்வார்கள், அப்படியிருந்ததுதான் கலெக்டரால் ஆகாதது கணக்குப் பிள்ளையால் ஆகும் என்று இப்படிப் பழமொழியாக வந்திருக்கும் என்று கருதுகிறேன். கணக்குப்பிள்ளை மட்டும் அல்ல, எந்த அதிகாரி தவறு செய்தாலும் நடவடிக்கை எடுக்கப்படும்.